# தந்தை பெரியார் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி
# (தன்னாட்சி)
# திருச்சிராப்பள்ளி - 620 023.

## கல்லூரி பட்டமளிப்பு விழா - பதிவு செய்தல் - கோரல் கடிதம்.

**அன்புடையீர்,**

நம் கல்லூரியின் பதினைந்தாவது பட்டமளிப்பு விழா, **2022-23ல் சேர்க்கைப் பெற்ற இளநிலை மற்றும் 2023-2024 ல் சேர்க்கைப் பெற்ற முதுநிலை மாணாக்கர்களுக்கு 14.03.2026** அன்று காலை 10 மணியளவில் நமது கல்லூரி வளாகத்தில் அமைந்துள்ள திறந்தவெளி கலையரங்கத்தில் நடைபெறவுள்ளது. இப்பட்டமளிப்பு விழாவில் நேரில் கலந்து கொண்டு பட்டம் பெற விரும்புவோர் (ஏற்கனவே ரூ.800/- செலுத்தி பல்கலைக்கழகத்தில் விண்ணப்பித்தவர்கள் மட்டும்) தங்களது பட்டப்படிப்பு விபரங்கள் மற்றும் இக்கடிதத்துடன் **07.03.2026**க்குள் தத்தம் துறைப் பொறுப்பாசிரியர் / துறைத்தலைவரை நேரில் தொடர்பு கொண்டு இக்கடிதத்தில் இணைக்கப்பட்டுள்ள இசைவுக் கடிதத்தை பூர்த்தி செய்து துறைத்தலைவரிடம் ஒப்படைக்க கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். பட்டம் பெற வரும் மாணவர்கள் **பதிவுக்கட்டணம் ரூ.250/- , புகைப்படம் ரூ.100/- , சான்றிதழ் உறை(File)- ரூ.200/-, கவுன், ரூ.150/-, கவுனுடைய முன்பணம் ரூ.100/- ஆக மொத்தம் ரூ.800/-ஐ** அவரவர் துறைத்தலைவரிடம் **14.03.2026** அன்று காலை 9.00 மணிக்குள் செலுத்தி பேராசிரியர்களின் அறிவுரையின்படி விழா அரங்கத்திற்கு செல்ல வேண்டும்.

- ❖ பட்டம் பெறுவோர் தன்னுடன் பெற்றோர் ஒருவரை உடன் அழைத்து வரலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. பத்து வயதுக்குட்பட்ட சிறுவர் சிறுமியரை அழைத்து வருதல் கூடாது.
- ❖ தங்களது அடையாள அட்டையினை பட்டம் பெறுவோர் தவறாது கொண்டு வருதல் வேண்டும்.
- ❖ பட்டமளிப்பு விழா அங்கியினை தத்தம் துறையில் உரிய தொகை செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.
- ❖ பட்டம் பெறுவோர் கைப்பேசியினை(Cell Phone) அரங்கிற்குள் எடுத்து வருதல் கூடாது.
- ❖ கல்லூரி நிர்வாகம் ஏற்பாடு செய்துள்ள புகைப்பட நிபுணரைத் தவிர மற்றோர் புகைப்படம் எடுத்தல் கூடாது.

க. சாம்கம்மாள 02/03/26

**முதல்வர்.**

இங்கே கத்தரித்து உடன் அனுப்பவும்.

✂ - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - -

அனுப்புநர்:

பெறுநர்:

துறைத்தலைவர்,..................துறை
தந்தை பெரியார் அரசு கலை மற்றும்
அறிவியல் கல்லூரி(தன்னாட்சி),
திருச்சி-23.

அய்யா/அம்மா,

**14.03.2026** அன்று நடைபெற உள்ள பட்டமளிப்பு விழாவில், கலந்து கொள்ள விரும்புகிறேன்.

| | |
|---|---|
| **பாடப்பிரிவு** | |
| **பெயர் மற்றும் தேர்வு பதிவெண்** | |
| **தேர்ச்சி பெற்ற ஆண்டு** | |
| **உடன் வருவோர் பெயரும் உறவும் (ஒருவர் மட்டுமே அனுமதிக்கப்படுவர்)** | 1. |

மாணவர் கையொப்பம்.